O.S.42/2019
PW2 – ருக்குமணி
நாள் 13.02.2026, 03.10 P.M.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் நான் 3ஆம் வாதி என்றால் சரிதான். இந்த வழக்கில் 2ஆம் வாதி என்னுடன் பிறந்த அக்கா என்றால் சரிதான். எனது அக்காவின் கணவர்தான் இந்த வழக்கின் 1ஆம் வாதி. 1ஆம் வாதிக்கு எனது அக்கா இரண்டாம் மனைவி ஆவார். 1ஆம் வாதிக்கு முதல் மனைவி மூலமாக ஜெயக்குமார் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தானது ஆதியில் வி.வி.எஸ்.அண்ணாசாமி பாண்டியன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய பூர்வீக ஊர் சிறுகுடி ஆகும். 1ஆம் வாதி ராஜேந்திரனின் மகன் ஜெயக்குமார் என்ன படித்துள்ளான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயக்குமாருக்கு மனநிலை சரியில்லை என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதாவது தாக்கல செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அவர் நல்ல நிலைமையில்தான் உள்ளார் அதனால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் வாதி எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.7 உயில் ஆவணமானது போலியானது என்றால் சரியல்ல.

2. எனது பெயருக்கு 1ஆம் வாதி தாவா சொத்தை எழுதிக்கொடுத்தது அவருக்கு எதன் அடிப்படையில் பாத்தியம் ஏற்பட்டது என்றால் 1ஆம் வாதி அண்ணாசாமி பாண்டியனிடம் கிரையம் வாங்கி இருந்தார். அது சம்பந்தமான மூல ஆவணங்கள் ஏதாவது நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தில் 1ஆம் வாதிக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.7 ஆவணமானது மோசடியானது என்பதால்தான் சொத்து எவ்வாறு கிடைத்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் வாதி வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தை ஏற்படுத்துவதற்கு முன்னதாகவே தாவா சொத்தின் பட்டா ஆனது 1ம் பிரதிவாதியின் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. 1 மற்றும் 2ஆம் வாதியின் பெயரில்தான் இருந்தது.

3. உயில் ஏற்படுத்தும் சமயத்தில் 1ம் பிரதிவாதியின் பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. உயிலில் கண்ட சொத்தானது 1ஆம் வாதிக்கு பாத்தியம்

இல்லை என்பதால்தான் அவருடைய மகனான ஜெயக்குமாருக்கு எழுதிக்கொடுக்காமல் என்னுடைய பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உயில் எழுதும் போது யார் யார் எல்லாம் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பத்திர அலுவலகத்தில் பதியப்பட்டது. தாவா சொத்தின் சர்வே எண் 192/14 என்றால் எனக்கு தெரியாது.

4.வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் சாட்சியாக யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தின் பெயரில் நான் அந்த சொத்து சம்பந்தமாக வேறு ஆவணத்தை உருவாக்க வில்லை என்றால் சரிதான். உயில் ஆவணமானது வழக்கிற்காக பெயரளவில் எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. உயிலில் உண்மை தன்மை இல்லை என்பதால் தான் இதே வழக்கில் முன் விசாரணைகளில் உயிலை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. உயில் மூலமாக தாவா சொத்தின் 50 செண்ட் சம்பந்தமாக என்னுடைய பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. உயில் ஆவணம் போலியானது என்பதால்தான் என்னுடைய பெயருக்கு பட்டா மாற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

Sd/Sadhu Siva Subramanian,
District Munsif cum
Judicial Magistrate,
Kadaladi